பதிவு எண் M. 4900 8-பக்கங்கள். தனிப்பிரதி 0-1-0

# குடி அரசு

நிறுவியது: 1924.

மாலை 23 } ஈரோடு 5-11-1949 சனிக்கிழமை } மலர் 9.

# துரோகப்படலம்!

★

### சதிச்செயலின் துவக்கம்!

உள்ளுக்குள் எப்போதுமுதல் புகைந்து வந்திருக்கிறது என்றால், மதுரை கருப்புச்சட்டை மாநாட்டுக்கு முன்பும், ஆகஸ்டு சுதந்தர நாள் கொண்டாட்டத்துக்கு முன்பும், கருப்புச்சட்டை நமது கழகத்தின் அணிச்சின்னம் என்பதாக ஆவதற்கு முன்னும், கழகத்துக்கு நிதி வசூல் திட்டம் ஏற்படுவதற்கு முன்னும் இப்படியாகப் பல வருஷங்களுக்குமுன்பு இருந்தே என்று கூறலாம்.

மற்றும் சொல்லவேண்டுமானால், சென்னையில் 'விடுதலை' காரியாலயத்தில் துராகிருதமாய் பிரவேசித்து அதில் உள்ள பெரியாரின் ஆள்களை பலாத்காரமாய் வெளியேற்றி பூட்டிக்கொண்டு "'விடுதலை' காரியாலயம் எங்களுடையதுதான்" என்று பலாத்காரம் துவக்கிய காலத்துக்குமுன்பு இருந்தும், மற்றும் மதுரையில் தோழர் பாண்டியன் அவர்கள் வேண்டுகோள்படி நிர்வாகக் கமிட்டி கூட்டப்பட்ட காலமுதற்கொண்டும், அதற்குமுன் 'விடுதலை' காரியாலயத்தில் இருந்து நிர்வாகஸ்தர், சப் எடிட்டர், எடிட்டர் என்கின்ற தன்மையில் மூவர் ஒப்பந்தம்செய்துகொண்டு ஒரேகாலத்தில் வெளியேறிவிட்டகாலம்முதற்கொண்டும், அதாவது சுமார் 6, 7 ஆண்டுகளாக சதி வேலை நடந்து வந்திருக்கின்றன. இவைகளை தெளிவாக அறியவேண்டியவர்கள் "சண்டே அப்சர்வர்" பத்திரிகை ஆசிரியர், 'நகரதூதன்' பத்திரிகை ஆசிரியர் மற்றும் இரண்டொரு **பிரமுகர்கள் ஆகியவர்களைக்** கொண்டு தெரிந்துகொள்ளலாம். தோழர் பாண்டியன் அவர்களும் அறிந்ததாகும். ஆனால் அவர் இப்போது சொல்லமாட்டார்.

### சில முக்கிய சம்பவங்கள்!

1. மதுரையில்ராமநாதபுரம் ராஜா மாளிகையில்நடந்த ஜஸ்டிஸ் கட்சி நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் பெரியார்மீது பல குற்றச் சாட்டுகள் கூறி, அவர் பொதுப்பணத்திற்குக் கணக்குக் காட்டவில்லை என்று கேள்விகேட்டு கலவரம் செய்த காரியத்தை மக்கள் நம்ப்ம்படி கெட்டிக்காரத் தன்மையாய் கேள்வி கேட்கச்செய்தவர் தோழர் அண்ணாதுரை தான் என்று அப்போதே தெரிந்தும், அக் கேள்விக்குப் பெரியார் சொன்ன பதிலுக்கு அப்புறம் அக்கமிட்டியானது கேள்வி கேட்டவர்களை கண்டித்து இனி அப்படி யாரும் பேசக்கூடாது, அவைகளைப் பற்றி பேச—கேட்க யாருக்கும் உரிமை இல்லை என்பதாக ஒரு தீர்மானம் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டவுடன், இவ்வளவு காயத்துக்கும் காரணமாக இருந்தவர் உடனே பெரியாருக்கு ஆதரவாகப்பேச முன் வந்தது கண்டு அவர்கூட்டுத் தோழர்கள் அவரைக்கண்டப்டி அக்கூட்டத்திலேயே கண்டித்து இருக்கிறார்கள். இது 'சண்டே அப்சர்வர்' பத்திராதிபருக்குத் தெரியும்.

2. "விடுதலை" காரியாலயத்தைப் பூட்டி சுவாதீனம் செய்துகொள்ள முயற்சித்த காரியத்தில் கூட்டுக் காரியக்காரராய் இருந்த அதே நபர், போலீஸ்மூலம் பெரியார் **காரியாலயத்தைத் திறந்து** சுவாதீனம் செய்துகொண்டவுடன்; மறுபடியும் பெரியாரிடம் வந்து நல்லபிள்ளையாக நடந்து பெரியாரைப் புகழ்ந்து பேசியும் எழுதியும் செய்து பெரியாரிடம் 20-பக்கத்துடன் ஒரு வாரப் பத்திரிகை நடத்தும்படியான அளவுக்கு அச்சு எழுத்துக்கள், கேஸ்கள், ஸ்டாண்டுகள், காலிகள் (Galleys) ஸ்டிக்குகள், (Sticks) முதலிய சுமார் **2000** ரூபாய் பெறுமான அச்சாபீசு சாமான்களை வாங்கிக்கோண்டு போய் அச்சாபீசு நடத்திக்கோண்டு பேப்பரும் போட்டுக்கோண்டு அதே சாமான்களைக்கொண்டு நடத்தும் பேப்பரில் அதே பெரியாரை இன்று பொதுவாழ்விலிருந்தே மாத்திரம் அல்லாமல் எதிலும் ஒழித்துக் கட்டிவிடுறேன் பார் என்ற தன்மையில் பொதுமக்களுக்கு தைரியம் கூறி, இவ்வளவு பெரிய சதிக்காரியம் செய்வதென்றால் அது எவ்வளவு ஆச்சரியப்படத்தக்கது, அது எவ்வளவு துணிவுடைய காரியமாகத் தக்கது என்பதை பொதுமக்களே உணர்ந்து கொள்ள வேண்டியது ஆகும்.

3. பெரியார் 1942 சுமாரில் பம்பாய்க்குச் சென்றபொழுது தனது செகரட்டரி என்ற முறையில் தோழர் அண்ணாத்துரையை அழைத்துக் கொண்டு போனார். அங்கு தோழர் ஜின்னா அவர்கள் பெரியாரைப் பார்க்க விரும்பினார். பெரியார் தோழர்ஜின்னா அவர்கள் வீட்டுக்குச் சென்றார். சென்ற போது தன்கூட வரும்படி அழைத்தார். தான் அங்குவர இஷ்டமில்லை என்று சொல்லிவர மறுத்து விட்டார். மற்ற தோழர்கள் **அதாவது மற்ற தோழர்**

# — விபசாரி —

*

என்னுடைய கதைக்கு நான் எந்த விதமான முன்னுரையும் கொடுக்கத் தயாராக இல்லை. என் சொற் சித்திரத்தை — வாழ்க்கை வரலாற்றை இதோ, தொடங்குகின்றேன்.

என் தகப்பனார் ஒரு பிரபல வியாபாரி' எங்கள் ஊரில் என் தகப்பனாரைப்பற்றி தெரியாதவர்கள் அதிகம் இல்லை. அவருக்கு நான் ஒருத்திதான். என்னைத் தவிர ஆணோ, பெண்ணோ அவருக்குக் கிடையாது! எங்கள் குடும்பத்திலே என் தகப்பனாரும், தாயாரும், நானும் தான். என் தகப்பனார் பெரிய பணக்காரர் இல்லை யென்றாலும் ஏழையல்ல! ஆகையால் என் இளமைப் பருவம் மகிழ்ச்சி பொருந்தியதாகவே இருந்தது. நான் பத்தாம் வகுப்பு வரை வாசித்தேன்.

காலம் நம்மை கேட்டா போகிறது? என் வயது 18 என்பது போய் 19 என்றாயிற்று? தஞ்சை ராமனாதன் செட்டியார் என்னை தமது மகனுக்கு வாழ்க்கைத் துணைவியாக்க எண்ணி எங்கள் வீட்டிற்கு வந்தார். அவரை அப்பா மிகவும் மகிழ்ச்சியுடன் உபசரித்தார். என் அப்பாவுக்கு என்னை அவர் மகனுக்கு கொடுப்பதிலே திருப்தி! எனக்கு அவருடைய புகைப் படத்தைக் காட்டினார்கள். அது என் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது! என் மனம் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்தது. ஒரு இன்பம்!

என் கணவராகப் போகும் அவருக்கு வயது இருபத்து நான்காம்: பி. ஏ. வகுப்பில் தேறி இருந்தார். அவர் புகை வண்டி நிலையத்தில் 'கார்டு' வேலையில் இருந்தார்.

ஒரு நாள் காலை பத்து மணி இருக்கும். வீட்டின் நடு மன்றத்திலே அப்பா அமர்ந்திருந்தார். அம்மா அவரின் அருகே நின்றிருந்தார். எதிரே சோதிடர் அமர்ந்திருந்தார். எங்கள் இருவருக்கும் பொருத்தம் சரியாக இருக்கிறதென்றார், சோதிடர். அப்பாவின் முகத்திலே மகிழ்ச்சி! அம்மாவின் மனத்திலே திருப்தி! சோதிடரின் கைக்கு அப்பாவின் பையிலே இருந்து பணம் மாறியது. ஆகையினாலே அவருக்கும் மகிழ்ச்சி! இந் நிலையில் என் திருப்தியைக் கேட்க யார் இருக்கிறார்கள்!

முகூர்த்த நாள் வைக்கப் பட்டது! திருமணம் எங்கள் ஊரில் தான் நடைபெறும்! முகூர்த்த நாள் நெருங்க நெருங்க, என் இருதயத்தின் ஓசை வேகமாகக் கேட்டது!

திருமணப் பந்தலிலே, நான் மணமகனின் அருகே அமர்ந்திருந்தேன். மேளங்கள் முழங்கின. எங்கள் கண்கள் சந்தித்தன! இதையும் மன்றத்திலே அமர்ந்திருந்த மக்கள் கண்டு மகிழ்ந்தனர். சரியான பொருத்தம் என்று பலர் பேசிக்கொண்டனர். என்ன இருந்தாலும் காஞ்சனை 'யோகக்காரி' தான் என்று என் தோழிகள் வம்பளந்து கொண்டிருந்தார்கள். ஏன் இன்னும் முகூர்த்த வேளை வரவில்லை என்று என் மனம் துடித்தது!

முகூர்த்த வேளையும் வந்தது. புரோகிதர் எழுந்தார். மணமகனிடம் கொடுத்தார், தாலியை அதைக் கட்டினார் என் கழுத்திலே, அவர்! மன்றத்தினர் வாழ்த்தினர், 'உங்கள் வாழ்வு நலமாய் இருக்கும்' என்று!

ஒரு நாள் அப்பாவுக்கு தந்தி ஒன்று வந்தது. அதைப் படித்த அப்பாவின் முகம் கருத்தது அவர், 'அய்யோ காஞ்சனை!' என்று கதறி அழுதார். நான் தந்தியை எடுத்துப் படித்தேன். அய்யோ, என் தலையிலே இடி! என் கணவர் மாண்ட செய்தியை தாங்கி வந்தது தான் அத் தந்தி! என்னை மாலையிட்ட மணாளன் இரயிலுக்கு இரையானார். இரயில் ஓடத் தொடங்கியதும் அவர் ஓடி ஏறினாராம், கால் தவறிவிட்டது. கழுத்து வெட்டப்பட்டது ரயில் சக்கரத்தால்!

நான் கதறினேன். கதறி என்ன செய்வது? இனி என் காதலனைக் காண முடியுமா? அவர் என் கழுத்திலே தாலி கட்டும்போது என மீது அவர் விரல் பட்டதே அது தானே அவர் எனக்கு அளித்த இன்பம்!

ஒரு திங்களுக்கு முன் என்னை தாழ்த்தியவர்கள் இன்று என்னை தங்கள் பார்வையால் வதைக்கின்றனர். அன்று என்னை, 'அதிர்ஷ்டக்காரி' என்றவர்கள், 'இன்று' 'அமங்கலி' என்கின்றனர். அன்று எனக்கு கட்டப்பட்ட தாலி, இன்று அறுக்கப்பட்டது. அன்று மண விழாவிற்கு வந்தவர்கள் இன்றுந்தான் வந்திருக்கின்றனர். ஏன் எனக்கு இந்நிலை? நான் செய்த குற்றம் என்ன?

என் துக்கத்தை விசாரிக்க மதுரையிலிருந்து என் பெரியப்பா வந்திருந்தார். வந்தவர், 'ஏதோ நடந்தது நடந்துவிட்டது கவலைப் படாதே!' என்றார். இதோடு நின்றிருந்தால் நான் ஆறுதல் அடைந்திருக்கக்கூடும். எனக்கு உபதேசம் கொஞ்சம் செய்தார்! கேளுங்கள் அவர் உபதேசத்தை, 'அம்மா, காஞ்சனை என்னமோ உன் விதி உன்னைக் கெடுத்து விட்டது. இனி நம் குலப்பெருமை உன் கையில் தான் இருக்கிறது. அதை கெடுத்துவிடாதே! ஏதோ இராமா கோவிந்தான்னு கடவுளைக் கும்பிட்டுக்கிட்டு இரும்மா. எல்லாம் அவன் செயல் நம்மால் என்ன இருக்கிறது!'

அதோடு அவர் நிற்கவில்லையே! 'அவனை' — கடவுளை — நான் வணங்க வேண்டுமாம்! என் வாழ்க்கையின் வளத்தைக் கெடுத்த

(தொடர்ச்சி 2-ம் பார்க்க)

---

"சண்டே அப்சர்வர்" பத்திராதிபர், ஜஸ்டிஸ் பத்திரிகை ஆசிரியர், கே. எம். பாலசுப்ரமணியம், டாக்டர் அம்பட்கார் ஆகிய இவர்கள் கூட வந்தார்கள். அப்போதே இவர்கள் காரியதரிசியின் யோக்கியதையைப் பற்றிப் பேசினார்கள்.

4. ஒரு முறை காரியதரிசி என்கின்ற தன்மையில் டெல்லி முதலிய இடங்களுக்கு அழைத்துப் போக டிக்கட் வாங்கப்பட்ட பிறகு வரமறுத்துச் சொல்லி அனுப்பிவிட்டார். இவைப்பழைய சங்கதிகள் என்றாலும் எவ்வளவு தூரம் பொறுப்பும், நல்ல எண்ணமும், தலைவர் பற்றுதலும் அப்பொழுது முதலே இருந்து இருக்கிறது என்பதை பொது மக்கள் உணர வேண்டும்.

"விடுதலை"

உரிமை] [ஆசிரியருக்கே

# தொல்காப்பியப் பொருளதிகார விளக்கம்.

—(புலவர் குழந்தை)—

இருவர் பெற்றோரும் காதலர் கருத்துக்குடன்படுவர். பின்னர் மணமகன் பெற்றோர் சுற்றஞ்சூழ மணமகள் வீடு சென்று விருந்துண்டு, மணவினைக்கேற்ற ஒரு நாளைக் குறித்துக்கொண்டு மீள்வர். பின்பு இரு பெற்றோரும் தம் சுற்றத்தாருக்கும், நட்பினர்க்கும் அழைப்பனுப்புவர். குறித்த நாள் வந்ததும் பெண் வீட்டார் வீட்டை ஒப்பனைசெய்து வாசலில் பந்தலிட்டு மணவறை யமைப்பர். சுற்ற முதலாயினோர் வந்து அத் திருமணப்பந்தலில் அமர்வர். பல்லியம் முழங்கும். இல்லுறை தெய்வ வழிபாடு செய்வர். பின் மூன்று அல்லது அய்ந்து மங்கல மகளிர் சென்று புதுக்குடங்களில் நீர் கொண்டுவந்து புதுத்தாழியில் ஊற்றி, அந்நீருள் பூவும் நெல்லும் இட்டுவைப்பர்.

பின்பு, மணமகளை ஒருமணையிலிருத்தி, மக்களைப் பெற்ற நான்கு மகளிர் மணமகளைச் சுற்றிநின்று, பலமுதாட்டியர் தாழியிலுள்ள நீரை மொண்டு தரத்தர வாங்கி, 'ஏ நங்காய்! கற்பினின்றும் வழாது, இல்லற நிகழ்ச்சிக்குவேண்டுவன உதவி, நின் கணவனைப்பேணுந்துணைவியாவாய், எனவாழ்த்தி நீராட்டுவர். இது வதுவை மணம் எனப்படும். வதுவை மணம்-நீராட்டுதல்.

நீராட்டியபின் காப்புக்கட்டி, புத்தாடை யுடுத்து, அணியணிவர். பின்பு, பெண்ணின் பெற்றோர் வந்து, 'குழந்தாய்! உன்விருப்பப்படியே, நீவிரும்பியவனுக்கே கொடுக்கிறோம். நீ அவனுக்கு வாழ்க்கைத் துணைவியாகி இணைபிரியாது இன்புற்றுவாழ்வாயாக' என வாழ்த்திக் கொடுப்பர். யாவரும் வாழ்த்துவர். இதுவே சங்ககால மணமுறை. மணமகன் பெற்றோர், மணமகள் வீடுசென்று விருந்துண்டு மணவுறுதி செய்து வருதல் இன்றும் வழக்கிலுள்ளது. பண்டுபோலவே இன்னும் அது பலஇடங்களில் பருப்புஞ்சோறுண்டல் எனவே வழங்கி வருகிறது.

மழை, மிகு குளிர், மிகுபனி முதலியன இல்லாததும், நிலா வெளிச்சமுள்ளதுமான காலமே மணவினைக் கேற்ற காலமாகும். தை முதல் ஆவணி வரையுள்ள காலமே பிரிவுக்கேற்ற காலமாதலாலும், மனையைப் பிரிந்தும், உடன்போயும் மணஞ்செய்துகொள்வதாலும் அக்காலமே மணவினைக் கேற்ற காலமாதலறிக. அறுவடையான பின் உழைப்பின்றி ஓய்வுடன் இருக்கும் காலமு மிதுவேயாகும்.

இனிக்களவு வெளிப் பட்டபின் வரையின் மணமகள் பெற்றோர் கொடுப்ப மணநிகழும். உடன் அழைத்துக் கொண்டுபோய்த் தலைமகனூரில் மணஞ் செய்துகொள்ளின் கொடைக்குரிய மரபினரான தலைமகள் பெற்றோர் இன்றி மண நிகழும். உடன்கொண்டு சென்றதையறிந்த சுற்றத்தார், அறிவர் சொற்படி தலைமகன் ஊர் சென்று மணமுடித்தலும்உண்டு. அப்போது கொடுப்போர்உண்டு.

மணவகை: 1.களவு வெளிப்படாமுன்- தலைவி யறத்தொடு நில்லாமுன்-தலைவன் பிறர் அறியாமல் தலைவியைத் தன்னூர்க்கு அழைத்துக் கொண்டுபோய் மணஞ்செய்து கொள்ளுதல், 2 களவு அலராக-ஊரார் அறிய- தலைவியை உடன் கொண்டுபோய் மணஞ் செய்து கொள்ளுதல், 3. அவ்வாறு உடன் கொண்டு செல்லும்போது செவிலி, அல்லது தலைவியின் சுற்றத்தார் இருவரையும் அழைத்து வந்து மணஞ் செய்தல், 4. அவனூரில் சென்று மணமுடித்தல், 5. களவு வெளிப்படப் பெற்றோர் உடன்பட்டு மணமுடித்தல் எனக் களவின் வழிவந்த கற்பு அய்ந்து வகைப்படும். இவ்வாறன்றிக் களவொழுக்க மொழுகாது மணஞ் செய்து கொள்ளுதலும் ஒரு சிலரிடை நடந்துவந்தது. களவின்வழி வராத கற்பிலும் மணமக்களை எதிர்ப்படச்செய்து, அவர் உடன்பாடு பெற்றே மணஞ்செய்து வந்தனர்.

கட்டுப்பாடு: நனி மிகு பண்டைக் காலத்தே ஒத்த பருவம், உருவம் முதலியனவுள்ள ஒருவனும் ஒருத்தியும் தாமே எதிர்ப்பட்டுக் கூடிக் களவொழுக்க மொழுகிக் காதல் முதிர்ந்தபின் - களவு முற்றியபின்- பலரறிய வெளிப்படையாய் வாழ்க்கைநடத்திவந்தனர். இதுவேபகுத்தறிவுள்ள (மா-33) மக்களின் இயற்கை வாழ்வியலாகும். அவ்வாறு நடந்துவருகையில், சிலர் களவொழுக்கமொழுகிக் களவுவெளிப்பட்டபின், 'நான் இவளைக் காதலிக்கவில்லை' எனப் பொய் பேசியும்; சிலர் பலரறிய வாழ்க்கை நடத்திய சில நாளில் அவளைக்கைவிட்டும் வந்தனர். அதுகண்ட குலப் பெரியார்கள், ஒரு சிலரிடை நடைபெற்றுவரும் இக்கெட்ட பழக்கம் பலரிடைப் பரவக்கூடுமென அஞ்சி, பலரறிய ஏற்றுக்கொண்ட ஒருத்தியை என்றும் கைவிடக்கூடாது' என்றும், அவ்வாறு களவொழுக்கம் ஒழுகி இல்லறம் நடத்தத்துணிவோர் பலர் முன்னிலையில் பெற்றோர் உடன்பட்டுக் கொடுக்கப் பெற்றுக் கொள்ள வேண்டும், என்றும் ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்தினர். இதையே ஆசிரியர்,

"கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வது" (கள-1) என்றார்.

அக்கட்டுப்பாட்டின் படியே எல்லாத் தமிழ் மக்களும் ஒழுகிவந்தனர். அதையே,

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர், !அய்யர் யாத்தனர் கரணமென்ப" (கள— 4)

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# குடி அரசு

5—11—49 சனிக்கிழமை.


## மக்கள் ஒட்டகங்களல்ல!

சராசரி வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள், யுத்தத்திற்கு முன்னால் 100 புள்ளி என்றால், யுத்தத்தின் பயனாக ஆலோசகர் சர்க்காரில் 300 புள்ளி ஆக உயர்ந்தது. இந்த நிலை இந்துஸ்தான் சுயராஜ்ஜிய சர்க்காரில் 400 புள்ளியையும் தாண்டிவிட்டது. இது நம் சுயராஜ்ஜிய சர்க்கார் தரும் விபரம். அதாவது மார்க்கெட்டில் விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கும் அமைப்பை வைத்துக் கொண்டு எடுத்த கணக்கு. கருப்புச் சந்தையின் விலை வாசியை வைத்துக் கொண்டால் இன்னும் எத்தனை '100'கள் அதிகமாகுமோ?

வந்த சுயராஜ்ஜியத்தால் வாழ வேண்டிய மக்களுக்கு ஒன்றும் வாட்டம்தீர இல்லையென்றாலும், நாட்டில் நடமாடும் பண்டங்களுக்கெல்லாம் விலையேற்றமா? என்கிற உணர்ச்சி ஊசி மருந்து ஏற்றப்படுவதைப்போல், இந்நாட்டில் சராசரி வாழ்க்கைத் தரத்தில் உள்ள ஒவ்வொருவரின் மனதிலும் ஏறும்படியான நிலைமை வளர்ந்து கொண்டே வருகிறது.

இந்த நிலைமை—உணர்ச்சி குடியேறுவதை, கண்டு சுயராஜ்ஜிய சர்க்கார் — பிரச்சார விளம்பரங்களின் பலனாகவே காலந்தள்ளிவிட முடியும் என்கிற பெரும் நம்பிக்கையுடைய சர்க்கார், கலங்கவே செய்கிறார்கள். ஆனால் ஏற்படுங்கலக்கம், அதிகாரத்திற்கு ஆட்டங்கொடுத்து விடுமே என்கிற அடிப்படையில் தோன்றியதாகத்தான் காணப்படுகிறதே தவிர, நிலைமை நீடிப்பது — வளர்வது நாட்டிற்கே நல்லதல்லவே என்கிற அடிப்படையில் தோன்றியதாய்க் காணோம்.

சென்ற மாதம் 28ந் தேதி இந்துஸ்தான் சர்க்கார் உடை—உணவு இரண்டிலும் விலையைக்குறைத்து விடப் போகிறோம் என்பதாக அறிவித்திருக்கும் அறிவிப்பு, ஏகாதிபத்தியவாதிகளுக்கு ஏற்பட்டிருக்கும் ஒரு கலக்கத்துக்கு அறிகுறி. ஆனால் தோன்றிய கலக்கம், தற்காப்பின் அடிப்படையில்தான் என்பதை அவற்றின் விலை வெட்டு வீதாச்சாரம் மெய்ப்பிக்கிறது.

உடையின் விலைகளை 100க்கு 4 வீதம் குறைத்து விடுவார்களாம்! உணவுப் பொருள்களின் விலைகளை 100க்கு 3 வீதம் குறைத்து விடுவார்களாம்! முந்தியதை ரூபாய்க்கு அரையணாவுக்குச் சற்று அதிகமாகக் குறைத்துவிடப் போகிறார்களாம். பிந்தியதை அரையணாவுக்கும் குறைவாகக் குறைத்துவிடப்போகிறார்களாம்.

இப்படி அரையணா, அரையே அரைக்காலணாக் குறைப்புங்கூட, எந்த அளவுக்கு உண்மையான குறைப்பு என்றால், ஆலை அரசர்களுக்கு லாபத்தில் குறைந்துவிடக் கூடாது, பொதுமக்கள் தலையில் அந்தக் குறைப்பைச் சுமத்தாமலும் இருக்கக்கூடாது என்கிற திட்டத்தை மனதில்வைத்துக் கொண்டுதான் குறைக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் குறைப்பை எண்ணும்போது, நமக்கு ஒட்டகத்தின் கதைதான் நினைவுக்கு வருகிறது. பாலைவனத்தில் பெரும் பெரும் பளுவான பொருள்களைச் சுமந்து செல்வதற்குப் பயன்படுத்தப்படும் ஒட்டகங்கள், அவற்றின்மீது பளுவான சாமான்கள் ஏற்றப்பட்டிருக்கிறது என்பதை அறிந்தால், ஒரு அடிகூட எடுத்துவைக்கமாட்டாதாம். இதற்காக, ஒட்டகத்தின்மீது எவ்வளவு பொருள்களை ஏற்றவேண்டுமோ அவ்வளவையும் ஏற்றிவைத்தபின் ஒரு சிறு பாறாங்கல்லையும் ஒட்டகத்தினுடைய கழுத்தின் ஓரமாய், கீழே விழுந்தால் ஒட்டகத்தின் கண்ணுக்குத் தெரியும்படி, அந்த ஒட்டகஞ் செலுத்துவோர் வைத்துக்கொள்வார்களாம். ஒட்டகம் புறப்பட மறுத்தவுடனே அந்தச் சிறிய பாறாங்கல்லை கீழே தள்ளுவார்களாம்! ஓகோ! நம்மீது ஏற்றிய சுமையைக் குறைத்துவிட்டார்கள், நாமினிப் புறப்பட வேண்டியதுதான் என்று எண்ணிக்கொண்டு வெகு வேகமாக ஒட்டகம் கிளம்பிச் செல்லுமாம். இந்த ஒட்டகங்களைப் போன்றவர்கள்தான் இந்நாட்டுப் பொதுமக்கள்-பாட்டாளிமக்கள் என்கிற எண்ணம் இல்லாதிருக்குமானால், நிச்சயமாக இந்தக் குறைப்பு என்கிற நாடகத்திற்கே இடமிருக்க முடியாது.

பண்டங்கள் ஒவ்வொன்றும் விலை மதிப்பு உயர்ந்து காணப்படும் நாளில், அந்த மதிப்பைக் குறைப்பதற்கு, முதலில் உணவுப் பொருளும் உடைவகையும் விலை மதிப்பில் குறையவேண்டும் என்கிற தத்துவத்தை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் இந்தத் தத்துவம் ஒரு 'ஷோ'வாகக் காட்டப்படாமல், படிப்படியே குறைந்துகொண்டு வருவதற்கான நிலையில் இருக்கவேண்டாமா என்றுதான் கேட்கிறோம்.

நூல் நூற்றுக் கொடுப்பவன் என்கிற மில் முதலாளிக்கு இந்தக் குறைப்பின்படி 100க்கு 12½ ரூபாய் லாபம் இருக்கும். ஆடை ஆக்கும் ஆலை அரசருக்கு 100க்கு 14 ரூ லாபம் இருக்கும். முதலாளிகளுக்கு இவ்வளவு லாபங்கொடுக்கப்பட்ட நிலையில்தான், ஆடைக்கு 4-சத வீதம் குறைவு என்கிற அறிவிப்பு!

உணவுப் பொருளுக்குச் சர்க்காரால் இப்போது விதிக்கப்பட்டு வரும் வரியை ஓரளவுக்குக் குறைப்பதினால்தான் 100க்கு 3சத வீதம் குறைவு என்கிற அறிவிப்பு!

ஆடையை எடுத்துக்கொண்டால் தனிப்பட்ட ஒரு சில நபர்கள் மட்டும் 100க்கு 26½ ரூபாய் கொள்ளையடிப்பதை ஒப்புக்கொண்டே இந்தக் குறைப்பு, அரங்கேற்றத்திற்கு வருகிறது என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

உணவுப் பொருள்களிலோ, இப்போதுள்ள பயனற்ற ரேஷன் செலவையும் — விளைச்சலைத் தேவையான அந்த இடத்திலேயே விநியோகியாமல், வைக்கோல் கட்டைத் தண்ணீரிற் போட்டுக்

ரோஜா முத்தையா

# தமிழ் இலக்கிய உலகம்!

தமிழ் இலக்கிய உலகத்தைப் பற்றி சிறிது சிந்திப்போமானால் வேதனைப்பட வேண்டிய நிலையில்தான் இருக்கிறோம். தமிழ் இலக்கியம் கெட்டு விடவில்லை. ஆனால் திரித்துக் கூறப்பட்டு அதையே உண்மை என மக்கள் நினைக்கும்படியான நிலையில் கொண்டு வந்து விடப்பட்டிருக்கிறது. இதற்கு ஆதாரமாக இலக்கிய பணிபுரிகிறோம். என்று கூறிக் கொண்டு தமிழ்நாட்டில் வெற்றி முரசு கொட்டும் பத்திரிகைகளே போதும். உண்மையில் பார்க்கப் போனால், உண்மையாகவே இலக்கியப்பணிபுரிந்த பத்திரிகைகள் பல செல்வாக்கிழந்து மறைந்தே போய்விட்டன. இன்னும் சில இறுதி மூச்சிலிருந்துகொண்டிருக்கின்றன. ஆனால் அதேசமயத்தில் இலக்கிய பணி என்ன என்பதே அறியாத மட்டரகப் பத்திரிகைகள் எதிர்பார்க்க முடியாத அளவுக்கு மக்களிடம் செல்வாக்குப்பெற்று வருகின்றதைப் பார்க்கும்போது உண்மையில் தமிழ் இலக்கிய உலகம் எத்திக்கு நோக்கிப்போய்க் கொண்டிருக்கிறது என்பது புரியாமல் போகாது.

தவிர, தமிழ் இலக்கியம் இக்காலத்தில் பத்திரிகை வியாபார மார்க்கட்டாகமாறிவிட்டது என்றே கூறலாம். எவ்வளவுதான் நல்ல ஆராய்ச்சிக்கட்டுரை, உள்ளமுருக்கும் இலக்கிய நயம்பட தீட்டப்பட்ட சிறுகதை, எழுச்சியூட்டும் எளிய, நல்ல கருத்தமைந்த கவிதை, அறிவூட்டும் மொழிபெயர்ப்பு, பொறுக்குமணிகள் ஆகியவைகள் அமைந்த பகுதிகள் உள்ள பத்திரிகைகள்மக்கள்மனதில்இடம்பெற முடியவில்லை. ஏனென்றால் நல்ல பகுதிகளைத்தர முடியுமான பத்திரிகைகள் மக்கள் மனதைக்கவரும்படியான விதத்தில் விளம்பரங்கள் செய்துகொள்ளும் நிலையிலிருப்பதில்லை. அதற்கு ஏற்றாற்போல் தகுந்த பொருளீட்டுடன் அவைகளிருப்பதில்லை.

இன்னும் கூறவேண்டுமானால் தமிழ் இலக்கிய உலகம் அழகிய ஆர்ட் அட்டையில் தீட்டப்படும் வர்ணப்படத்திலிருக்கிறது என்று கூடத்தைரியமாகச் சொல்லலாம். அழகியஆர்ட்அட்டைப்படத்தைப் பார்த்தவுடன் பார்ப்பவர்கள் வாங்கவேண்டுமென்றஆசைகொள்கின்றனர். இதை ஓவியரின் கைத்திறமையிலிருக்கிறது என்று கூடச் சொல்லலாம்.

எவ்வளவுதான் எழுத்தாளன், தன் சிந்தனையைச் செலவுசெய்து கண்ணீரில்பேனாவைத்தோய்த்துத் தோய்த்து சோகரசத்தில், பல இரவுகளைவீணாக்கி எழுதினாலும், அந்தக்கஷ்டத்தை அந்த வியாபார பத்திரிக்கைக்காரர்கள் கவனிக்கிறார்களா ? படிக்காமல்கூட பக்கத்திலுள்ள குப்பைத் தொட்டியில், ஆஸ்பத்திரியில் பிணத்தைப் பல துண்டுகளாக வெட்டி அதற்கென்று உள்ள அறையில் தள்ளுவதுபோல், கிழித்துப் போட்டுவிடுகிறார்கள். அந்தப் பத்திரிகை ஆபிஸில் அக் கட்டுரையோ கதையோ பட்டபாட்டை அந்த எழுத்தாளன் நேரில் பார்த்திருப்பானேயாகில் கட்டாயம் தூக்குப் போட்டுக்கொண்டு பிராணனை விட்டிருப்பான். அதற்கு எதிர்மாறாக அம்மாமி நடையிலும், அர்த்தபுஷ்டி ஒன்றுமே இல்லாமலும், பொழுதுபோக்குக்காகவும், புகழுக்காகவும் எழுதப்பட்ட கட்டுரைகளுக்கும் கதைகளுக்கும் சன்மானத்துடன் முதலிடம் கொடுக்கப்படுகிறது. இத்தகைய செயல் இலக்கிய பணியா? அல்லது இலக்கிய கொலையா? என்பதை சற்று தாராளச் சிந்தனையுடன் நோக்கவேண்டும். தமிழ் இலக்கிய உலகம் எந்தக் காலத்திலும் வெறும் பொழுது போக்குக்காக இருந்ததில்லை. மூடக் கொள்கைகளைப் பரப்புவதற்காகவே பயன்பட்டுவந்த தமிழ் இலக்கிய உலகம் தற்பொழுது பகுத்தறிவு கொள்கைகளைப் பரப்புவதற்குப் பயன்படுவதுபற்றி உண்மைத் தமிழ் இலக்கியக்கர்த்தாக்கள் பெருமைப்பட வேண்டும். ஆனால் அவர்களும் மூடக் கொள்கைகளின் பக்கம் வரிந்துகட்டி நிற்பார்களேயானால் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனென்றால் தமிழ் இலக்கிய உலகில் எழுத்தாளர்களும், இலக்கிய கர்த்தாக்களும் தங்கள் சுய சிந்தனைகளைப் பிரதிபலிக்க முடிவதில்லை. எண்ணம் ஒன்று எழுத்து ஒன்றாகத்தான் இருக்கவேண்டுமென்று தமிழ் இலக்கிய உலகம் கட்டாயப்படுத்துகிறது. ஆனால் அது தற்காலத்தில் ஓர் அளவு மாறிக்கொண்டுவருவதுபற்றி உண்மையான, எண்ணமும் எழுத்தும் ஒன்றாகவே உள்ளஇலக்கியக்கர்த்தாக்கள் உண்டாக முடியுமென்ற நம்பிக்கைக்கு இடமேற்பட்டிருக்கிறது.

ஆனால், ஒரு குறிப்பிட்டதுறைக்காகவே உழைக்கிறோம் என்று கூப்பாடு போட்டுவந்த சிலபத்திரிக்கைகள் சிற்சில சமயங்களில் தங்களின் சுயநலசுயரூபத்தைக் காட்டிவிடுகின்றனபத்திரிக்கையைப்பணப்பெட்டியை நிரப்புவதற்காகவே நடத்துகிறோம் என்று கூறிவிட்டால் அதில் ஆச்சரியமோ வேறு

---

சுமந்து காட்டுவதுபோல வேறு இடத்திற்குக் கொண்டுபோவதையும்—அங்குள்ள விளைவை மற்றோரிடத்திற்கு மாற்றுவதும்— அநுபவமற்ற நிர்வாகத்தினால் அபரிமிதமான உணவுப்பொருள் ஆண்டுதோறும் நாசமாவதும் நின்றுவிடுமானால், இன்னும் எத்தனையோ அளவு குறைய முடியுமே என்கிற கேள்வியை எவ்வளவு காலத்திற்குத்தான் மறைத்து விட முடியும் என்று ஓமந்தூராரே கேட்கிறார்.

நிலத்தில் பாடுபடுபவனுக்கு உரிமையுமில்லை - ஊதியமுமில்லை. வாழ்க்கையில் போராடி, வயிற்றுக்குக் கெஞ்சி, தயவை எதிர்பார்த்துத்தான் அவன் வாழ்ந்தாக வேண்டும். அவன் உழைப்பைப் பொருளாக்க இடையே ஒரு தரகன், அவனுக்குப் பெரும் லாபம்! இதற்குச் சர்க்கார் அங்கீகாரம்!!

இதைப்போலவே ஆலைத் தொழிலாளியின் வாழ்வும். அங்கும் தரகர்கள் பிழைக்கத் தாராளமான - பரந்த திட்டம்!

இந்த நிலையில்தான் 4-சத வீதமும் 3-சத வீதமும் குறைவு என்கிற அறிவிப்பு!

இதை எண்ணும் போது தான் மக்கள் என்ன ஒட்டகங்களா? என்றைக்கும் ஒட்டகங்களாகவே தான் இருந்து விடுவார்களா என்று நாம கேட்கிறோம்.

எதுவோ கொள்ள வேண்டிய அவசியம் நமக்கும் ஏற்படாது. ஆனால் சொல்லுக்கும் செயலுக்கும் அணுவும் கூட ஒற்றுமையின்றி சிற்சில சமயங்களில் உருவத்தை மாற்றிக்கொள்ளும் திடமற்ற பத்திரிக்கைக்காரர்களும் குறிப்பிட்ட துறைக்கே எங்கள் பணி என்று ஏன் கூறிக் கொள்ள வேண்டும். அவர்கள் கொள்ளுவதும் ஒரு வழியில் உண்மைதான்! குறிப்பிட்ட துறை— அதாவது பணப்பெட்டியை நிரப்ப வேண்டுமென்ற குறிப்பிட்ட துறை- இவர்கள் தங்கள் பணப்பெட்டியை எவ்வளவு வேண்டுமானாலும் நிரப்பிக்கொண்டு போகட்டும். ஆனால் அது தான் இலக்கிய சேவை என்று கூறிக் கொள்கிறார்களே! அது தானே நமக்கு வேதனையாக இருக்கிறது? முதலில் இவர்கள் இலக்கியம் என்பது என்ன என்று அறிந்து கொண்டாலே போதும். அவர்கள் அதற்காகப் பணிபுரிய வேண்டியதில்லை. பணிபுரிகிறோம் என்று சொல்லிக் கொண்டு தானே இலக்கியத்தையே திரித்துக்கூறி வருகிறார்கள்?

இலக்கியம் என்பதற்குப் பலர் பலவிதமாக வியாக்யானம் புரிகிறார்கள். அவர்கள் எப்படி எப்படிக் கூறினாலும் கடைசியில் இலக்கியத்தினுடைய உண்மை தத்துவத்தின் அடிப்படைக்கு வந்துதான் ஆகவேண்டும். சுருக்கமாகக் கூற வேண்டுமானால், மன அமைதியைக் கெடுக்கின்ற முறையில், உள்ளத்தை உருக்கும் - அதாவது படிப்பவர்களின் கவனத்தை முற்றும் ஆகர்ஷிக்கின்ற முறையில் எழுதப்படுகின்ற எழுத்தோவியங்களே உண்மை இலக்கியம் என்பதாகும். அப்படி என்று தான் இலக்கிய மேதாவிகளும் இலக்கியக் கர்த்தாக்களும் கூறுகிறார்கள். இது உண்மையானால் தமிழ் நாட்டில் எத்தனை தமிழ் பத்திரிக்கைகள் இலக்கிய பணிபுரிகின்றன?

இதுவா அத்தகைய இலக்கிய பணி? அறுபது பக்கமுள்ள ஒரு பத்திரிக்கையில் நல்ல சங்கதி ஒன்றை தேடிப் படித்தாலும் ஒன்று கிடைக்காது? முதலில் பத்துப்பக்கங்களில் விளம்பரமும், கடைசியில் பத்துப் பக்கங்களில் விளம்பரமும், கேலிச் சித்திரம் நாலுபக்கங்களிலும், ஏதாவது எழுத வேண்டும் என்ற காரணத்துக்காக இரண்டு பக்கங்களில் ஒரு தலையங்கமும், கம்பராமாயணம், நகர்நீங்கு படலத்தில் ராமன் காடேகும்போது அயோத்தி நகரத்து அழகிகள் அங்க அவயவங்கள் தெரியும்படி அழுது புரண்ட காட்சியை கம்பன் தன் கைக்கேமராவை 'குளோசப்'பில் வைத்துப் பிடித்த காட்சியை வர்ணிக்க பாடப்பட்டுள்ள பாடல் இரண்டுக்கு எட்டுப் பக்கங்களில் விளக்கவுரையும் ஒன்பது பக்கங்களில் உங்கள் ராசிப்பலனும், திண்ணைப்பேச்சு, சாஸ்திரி பேச்சு, சர்மா பேச்சு எஞ்சிய பக்கங்களிலும் போட்டுப் பக்கங்களை நிரப்பிவிட்டு, மகா பாரதத்தில் துரோபதையைத் துகிலுரியும் காட்சியை ஓவியர் தம் கற்பனைக்கு எட்டிய வரையில், பாண்டவர் தம் பத்தினியை, குன்றைக் குடையாகப் பிடித்த, கோபியர்களை நிர்வாணமாக்கி அந்தக் காட்சியைக் கண்டுகளித்த, குசேலனுக்கு குபேர சம்பத்தளித்த, பார்த்தனுக்குச் சாரதியான, பல பல உருவங்கள் எடுத்த மூவல்லரசுக் கடவுள்களில் ஒருவரான, படைப்புக் கடவுளின் தந்தையான, பல ஆயிரம் கோபியர்களுக்குக் கணவரான கண்ணபிரானின் தங்கை முறையாக வேண்டிய துரோபதையைச் சில அங்க அவயவங்கள் தெரியும்படி பலபேர் முன்னிலையில் பஞ்சபர்த்தாக்களிருக்கும் போதே யாரோ ஒருவன் துகிலுரிவதைத் தூரத்திலிருந்தே பார்த்து, அபயமளிக்கும் காட்சியை நாலு வர்ணத்தில் நல்ல ஆர்ட் காகிதத்தில் அச்சிட்டு அதையே அட்டையாகப்போட்டு பார் எங்கள் இலக்கியப் பணியை என்று பசப்பிடும் பத்திராதிபர்களை இலக்கியப்பணியாளர் என்று ஏற்றுக்கொள்ள முடியுமா?

அடுத்தபடியாக எழுத்தாளர்கள் இப்பத்திராதிபர்களுக்கு துதிபாடும்படியாகவே தங்கள் எண்ணத்தையும் எழுத்தையும் மாற்றிக் கொண்டு விடுகின்றனர். சிலர் தங்கள் பெயர் பத்திரிக்கையில் வர வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காகத் தம் பகுத்தறிவையே பாழ்படுத்தி விடுகின்றனர். அவர்கள் எப்படியோ கெட்டுகுட்டிச்சுவராகிப் போகட்டும். அதுபற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால் நாட்டிக்கு எந்த அளவு தீங்கை உண்டுபண்ணுகிறார்கள் என்பதைச் சற்று பார்க்க வேண்டும். அரைகுறையாக, பகுத்தறிவுப் பிரசாரத்தினால் ஓர் அளவு மடமையிலிருந்து தெளிவு பெற்றுவரும் மக்களையும் இப்படிப்பட்ட எழுத்தாளர்கள் தடுத்து நிறுத்தித் தவறான பாதையைக் காட்டுகின்றனர். இது மிகவும் தகாத செயல்! இவர்களும் இலக்கியத்தைப் புரிந்து கொள்ளாதவர்கள் என்றே துணிந்து கூறலாம். நாட்டுக்குக் கேடு செய்யும் பத்திரிக்கைகளை இவர்கள் ஊக்குவிக்கிறார்கள். தவிர, இவர்கள் அப்படி ஏதாவது எழுதும் கதைகளிலோ, கட்டுரைகளிலோ நாலு பக்கம் தேடினாலும் ஒரு நல்ல கருத்தைக் காண முடியாது. இவர்களது இலக்கியத்துக்கு இலக்கணமே கிடையாது. இலக்கணத்துக்கேற்ற இலக்கியப் பணிபுரிபவர்களுக்குத் தான் இடமே கிடையாதே!

படாடோபமாகவும், டாம்பீகமாகவும் தங்கள் கதைப் பாத்திரங்களை சிருஷ்டித்து விடுவதும் அவர்கள் பண்டித நடையில் பேசுவதும் இலக்கியமாகாது. ஏழை எளியவர்களைத் தங்கள் கதைகளில் சிருஷ்டித்தால் தங்களின் இலக்கிய பணியின் தரம் குறைந்து போய் விடும் என்று சில விசித்திர எழுத்தாளர்கள் நினைக்கின்றனர்.

இலக்கியம் என்பது நாசூக்காக எழுதும் எழுத்தாளர்களுடைய வாழ்க்கையில் தான் இருக்கும் என்பதில்லை. அது நாட்டுப்புற வண்டிக்காரர்களின் வாழ்க்கையிலும் பொங்கி எழுகிறது" என்று பிரபல மராட்டிய நாவலாசிரியர் காண்டேகர் சொல்லுகிறார். இதை நம் தமிழ் நாட்டுப் பிரபல பேனா வீரர்கள் என்று சொல்லிக் கொள்ளும் இலக்கியக் கர்த்தாக்கள் அறியவேண்டும். தங்களின் இலக்கியப் பணியால் நாட்டுக்குக் கடுகளவாவது நன்மை உண்டாக வேண்டும் என்ற எண்ணத்துடன் பணிபுரிய வேண்டும். அத்தகைய நோக்கமோ, செயலாற்றும் தன்மையோ இல்லாவிடில் தமிழ் இலக்கிய உலகத்திலிருந்தே விலகி விடுவது நல்லது.

மேல்நாட்டு இலக்கிய கர்த்தாக்கள் பெரும்பாலும் புரட்சி வீரர்களாகவே இருந்திருக்கிறார்கள். அவர்கள் புரட்சி வீரர்களாக இல்லாவிட்டாலும் புரட்சிவீர

ராஜா முத்தையா நூலக அறக்கட்டளை

களை உண்டுபண்ணியிருக்கிறார்கள் தங்கள் பேனா முனையால். வால்டையரின் அறிவுப் புரட்சி எந்தக்காலத்திலும் மங்காது. புரட்சிசெய்த பேனா வீரர்களில் மிக முக்கியமாகக் கருதப்பட வேண்டியவராக சோவியத்நாட்டில் மாபெரும் சக்திகளைத் திரட்டிய புரட்சிவீரன் மாக்ஸிம்கார்க்கியைச் சொல்லலாம். மாக்ஸிம் கார்க்கியை சோவியத் நாடு பெற்றது குறித்து இன்றளவும் அங்குள்ள மக்கள் மிகவும் பெருமையடைகின்றனர். மாக்ஸிம்கார்க்கியின் கால்படாத ஊர் களங்கமுள்ளது என்று சோவியத் நாட்டில் கருதப்படுகிறது. அப்படி என்றால் அந்த மேதைக்கு அங்கு எவ்வளவு பெருமை என்று பாருங்கள்! அவன் சாதித்த காரியம் அப்படிப்பட்டது.

கார்க்கியின் நூல்களில் சிறந்தது என்று கருதப்படுவது அன்னை. (The Mother) அது பெயருக்கு நாவல். ஆனால் பொதுவுடமைத் தத்துவத்துக்கே தாய் (Mother) என்று கூறலாம். வெறும் கட்டுரை நூல் என்றால் எவரும் படிக்கமாட்டார்கள் என்றுதான் நாவல் ரூபத்தில், பாத்திரங்களை சிருஷ்டித்து அவர்களுக்குக் கொள்கைகளை ஊட்டி, அவர்களைக்கொண்டே செய்யவேண்டிய காரியத்தை செய்துமுடித்துக் காட்டுகிறார்.

வெறும் சமயலறையையும், தன் கணவனையும் மட்டுமே தெரிந்திருந்த அன்னை நீலோவ்னாவை மாபெரும் புரட்சிக்காரியாக்கிக் காட்டுகிறான் கார்க்கி. அவளுடைய மகன் புரட்சிக்காரர்களுடைய தலைவனாகிறான்! கார்க்கியின் கதைகளில்வரும் பாத்திரங்கள் படாடோபக்காரர்கள் அல்ல. அவர்களைப் பார்க்கவே முடியாது. பாமரர்களைத்தான் கார்க்கியின் கதைகளில்காண முடியும்.

ஆனால் நம் தமிழ்நாட்டு இலக்கியகர்த்தாக்களின் கற்பனைக்கு ஏழை, எளியவர்கள் எட்டுவதே கிடையாது. அப்படிப்பட்ட ஏழைகள் எழுத்தாளர்களின் தரத்தைக் குறைப்பவர்களாக தெரிகிறார்கள். இது எவ்வளவு விபரீதமான எண்ணம்? இந்த எண்ணம் இருக்கிறவரையில் தமிழ் இலக்கிய உலகம் இலக்கிய கர்த்தாக்களைப் பெறவில்லை என்றுதான் அர்த்தம்.

கார்க்கி தன் உணர்ச்சிகள் அத்தனையையும் "மாஜி மனிதர்கள்" என்ற சிறு நாவல் ஒன்றில் கொட்டியிருக்கிறார். மாஜிமனிதர்கள் என்பதன் அர்த்தம் புரியாததல்ல. உதாரணமாக, கடந்த உலகப் போரின்போது ராணுவத்தில். சேர்ந்து தொண்டாற்றிவிட்டு, போர் முடிந்ததும் ராணுவத்திலிருந்து விடுதலைபெற்று வீடு வந்தவர்களை எப்படி மாஜி சிப்பாய்கள் என்று அழைக்கிறோமோ அதேபோன்று அர்த்தங்கொண்டதுதான் மாஜி மனிதர்கள் என்பதும். அதாவது மனிதர்களாக வாழ்ந்துவந்தவர்கள் ஒரு காலத்தில் பிறகு மனித வாழ்விலிருந்து விடுதலைபெற்றவர்களாகிவிடுகிறார்க்ள். மனித வாழ்வு அவர்களுக்கு இல்லை. அதனால் மாஜிகளாகிவிடுகிறார்கள. அப்படிப்பட்டவர்கள்வரும் கதைக்குப் பெயர்தான் மாஜிமனிதர்கள்!

கார்க்கியின் கதைகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, புத்தகங்களாக வெளிவரவேண்டும். அவைகளைப் பாமரர்கள் படித்தறிய வேண்டும். அப்பொழுதாவது நம் தமிழ் இலக்கியகர்த்தாக்கள் தங்கள் எண்ணங்களை மாற்றிக்கொண்டு, நாட்டுக்கு நல்லது செய்யவேண்டும் என்று திருந்தி, பயன்படத்தக்கவிதத்தில் தங்கள் எழுத்தையும் எண்ணத்தையும் உபயோகிப்பார்களா என்பதே நம் கேள்வி. இந்த நல்ல பணி தமிழ் இலக்கியத்துக்கு மிகமிகத் தேவை.

மு. இராஜமாணிக்கம்.

## மறக்காதீர்!

ஜில்லாபோர்டு தேர்தல்களில் கிடைத்த வெற்றி காங்கரஸ் தவிர வேறுஸ்தாபனத்தை நம்ப மக்கள் இப்பொழுது தயாராயில்லை என்பதைக் காட்டுவது வாஸ்தவமே. ஆனால் காங்கிரசுக்கு எதிராகப் பதிவான பெருவாரியான வோட்டுக்கள் மக்களின் அதிருப்தியைக்காட்டும் எச்சரிக்கை என்பதை மறந்துவிடலாகாது.

தினமணி 31--10--49

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

'அவனை' நான் வணங்க வேண்டுமாம்? என் குங்குமத்தைக் கலைத்த 'அவனை' நான் கும்பிட வேண்டுமாம்? என் மஞ்சளை மறைத்த 'அவனை' நான் மனமாற போற்ற வேண்டுமாம்? என் மாங்கல்யத்தை மண்ணிலேவிழச்செய்த 'அவனை' நான் மண்டியிட்டு வணங்கவேண்டுமாம்? சொல்லுங்கள், இது நேர்மையா? நீதியா? நிலைக்குமா? தகுமா?

இரண்டு ஆண்டுகள் ஒன்றன்பின் ஒன்றாக ஓடின. எங்கள் எதிர் வீட்டுக்கு அன்று ஒருவர் குடிவந்தார். வயது இருபத்தைந்துதான் இருக்கும். கண்ணுக்கு நிறைந்த காளை அவர். ஏதோ எங்கள் ஊரில் ஒஸ் ஆபின்றிலே வேலை பார்க்கிறாராம்!

அன்று என் தந்தை வெளியே சென்றிருந்த நேரம். நான் என் அறையிலே இருந்தேன். அப்போது அவர் என் அறையின் அருகே வந்து, ஒரு கடிதத்தை என் எதிரே போட்டுவிட்டு அவசரமாக சென்று விட்டார். அதை எடுத்துப்படித்தேன். எனக்குத்தான் எழுதியிருந்தார். நான் விதவை என்பது அவருக்குத் தெரியுமாம்! இருந்தும் அவர் என்னைக் காதலிக்கிறாராம். முறைப்படி பதிவு மணம் செய்து கொள்ளலாம் என்கிறார். அதற்கு என் அபிப்பிராயம் கேட்டே அதை எழுதியிருந்தார். இதை கொடுக்க அவருக்கு எவ்வளவு தைரியம் இருக்க வேண்டும்? ஆண்களே இதில் கொஞ்சம் தைரியசாலிகள்தான்!

அக் கடிதம் கிடைத்த அன்று இரவு நான் தூங்கவே இல்லை. பலவிதமான போராட்டங்கள் என் மனதிலே உண்டாயின.

'அடி காஞ்சனா, குலப்பெருமையைக் கெடுத்து விடாதே!

'குலப்பெருமையைப்பார்த்தால் நீ சுகமாக வாழமுடியுமா?'

'அடி காஞ்சனா, கடவுள் தண்டிப்பார்!'

'அவர் யார் உன்னை தண்டிக்க உனக்கு இன்பம் அளிக்க மறுத்த ஆண்டவனுக்கு துன்பத்தை அளிக்க மட்டும் அதிகாரம் உண்டா?'

'விபசாரி' என்ற பட்டத்தை மக்கள் சூட்டுவார்கள்!'

'விதவை என்று தளபக்கேணி

## ஈரோடு தாலூகா திராவிடர் கழக மாநாடு.

28—10—49ந் தேதி மாலை 3 மணிக்கு மாநாட்டு ஆலோசனைக் கமிட்டிக் கூட்டம் கழகக் கட்டிடத்தில் நகர திராவிடர் கழகத் தலைவர் தோழர். எஸ். எஸ். ராஜன் தலைமையில் கூடியது.

4—12—49ல் தாலூகா திராவிடர் கழகமாநாடு, மாவட்ட சுயமரியாதை மாநாடு ஆகியவைகளை ஈரோட்டில் நடத்துவதாக முடிவு செய்யப்பட்டது.

மாநாடுகளுக்கு, இந்திராணி பாலசுப்பிரமணியம் அம்மையார், ஏ. பி. ஜனார்த்தனம் எம். ஏ., திருக்குறள் முனுசாமி, டி. பி. வேதாசலம், பாலவனம் ஜமீன்தார் துரையரசன், பென்னாகரம் நஞ்சையா ஆகியவர்களை அழைப்பதாக முடிவு செய்யப்பட்டது.

வரவேற்புக் குழுக்கட்டணம் ரூ. 2-0-0 ஆகவும், பிரதிநிதிகள் கட்டணம் 0-8-0 அணாவாகவும், பார்வையாளர்கள் கட்டணம் 0-4-0 அணாவாகவும், பெண்களுக்குக்கட்டணம் இல்லையென்பதாகவும் முடிவுசெய்யப்பட்டது.

தாலூகாவின் பல பாகங்களிலிருந்தும் 25 அங்கத்தினர்கள் வந்திருந்தனர். வரவேற்புக்குழுக்கு 50 பேர் போல் சேர்க்கப்பட்டு ரூ. 100 போல் அங்கேயே வசூலானது.

மாநாட்டு விளம்பர அதிகாரியாக நகர திராவிடர் கழகத்துணைத் தலைவர் தோழர் ஆர். டி. எல்லநாயகம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மூ. சுப்பையன்,
நகரதிராவிடர்கழகம், ஈரோடு.

## ஆலோசனைக் கூட்டம்.

6-11-49 தேதி ஞாயிற்றுக்கிழமை மாநாடுகளுக்கு வரவேற்புக் கழகத் தலைவர்கள், செயலாளர்கள் தேர்ந்தெடுக்க கழகக் கட்டிடத்தில் ஓர் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். மாவட்ட அன்பர்கள் அனைவரும் இதையே அழைப்பாகக்கொண்டுவர வேண்டுகிறேன்.

வர இயலாத அன்பர்கள் ஒப்புதல் கடிதம் அனுப்ப வேண்டுகிறேன்.

ஆர். டி. எல்லநாயகம்,
விளம்பர அதிகாரி,
திராவிடர் கழகம், ஈரோடு.

---

யில் துடிப்பதைவிட விபசாரி என்று இன்பக் கேணியில் நீந்துவது மேல். 'விபசாரி' என்று கொஞ்ச நாளைக்குத்தான் உலகம் உன்னைச் சொல்லும். பிறகு உன்னையே குணவதி என்று உலகம் போற்றும். வறண்ட உன் வாழ்க்கையை வளமாக்க அதோ எதிர் வீட்டிலே சிற்பி.

மேல்கண்ட போராட்டம் என் மனதிலே நடந்தது. முடிவில் அவரைமணப்பதென்றமுடிவுக்கே வந்தேன்.

அப்பா கோபிப்பாரே?

எவ்வளவு நாளைக்கு கோபிப்பார்! கொஞ்சகாலம் சென்றதும் சரியாய் விடாதா!

குலப்பெருமை குலையுமே!

ஆமாம்! நான்மணம் செய்து கொண்டால் எங்கள் குலம் விளங்குமே!

இப்போது உலகம் என்னை 'விபசாரி' என்றா அழைக்கும்?

உங்களைத்தான் கேட்கிறேன்!

ஜெயா.

---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

என்றனர். பொய்—ஒருவன் ஒருத்தியொடு களவொழுக்கம் ஒழுகிவிட்டு நான் ஒழுகவில்லையென்பது. வழு-அவ்வாறு சொல்லுதலேயன்றி, ஒருத்தியொடு களவொழுக்கம் ஒழுகிச்சிலநாள்வாழ்க்கை நடத்திவிட்டு அவளைக்கைவிடுதல். கரணம்-மணவினை அய்யர் குலப்பெரியார்கள். குலப்பெரியார்கள் ஒன்றுகூடி மணவினை என்னும் ஒருவகைக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தினர். ஆசிரியர், 'என்ப' என்று பிறர்வாய்க் கேள்வியாக, அல்லது நூலறிவாகக் குறிப்பது தமிழரது மணவினையின் தொன்முது பழமையைக் காட்டும். இது தொல்காப்பியருக்கு நெடுங் காலத்திற்கு முன்னர் ஏற்பட்டதாகும். இம்முறையே கடைச் சங்க காலம் வரையிலும் நடந்துவந்து அதன் பின் நாமுன் காட்டிய சங்க கால மண முறை ஏற்பட்டிருக்கிறது.

**மணவேற்றுமை:** இவ்வாறு குலப் பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டின்படி, எல்லாத் தமிழ் மக்களும் ஒருவனும் ஒருத்தியுமாய் எதிர்ப்பட்டுக் காதல் கொண்டு மணஞ்செய்து வாழ்ந்து வருகையில், 'நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்ததுபோல' தமிழர்களுக்குள் மண வேற்றுமை உண்டாகத் தலைப்பட்டது. இக் காலந்தான் தமிழ்மக்கள் வெவ்வேறாகப் பிரிவுபட்டதன்- பிரிக்கப்பட்டதன் தொடக்க காலமாகும். இதுநாள் வரையிலும் அரசர், வணிகர், உழுவித்துண்ணும் வேளாளர் (நிலக்கிழார்), உழுதுண்ணும் வேளாளர் என்னும் நால் வகைப்பட்ட தமிழர்க்கும் ஒன்றாக நடந்து வந்த மணவினை, இதிலிருந்து உழுதுண்ணும் வேளாளர்க்கு வேறானது. மேல் மூவரும் உழுதுண்ணும் வேளாளருடன் கொண்டு கொடுப்பதை நிறுத்திக் கொண்டனர். இவர்மூவரும் ஒன்றாகக் கொண்டு கொடுத்தும், உழுதுண்ணும் வேளாளர் தங்களுக்குள் கொண்டு கொடுத்தும் வரலாயினர். இதையே ஆசிரியர்,

'மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க்காகிய காலமும் உண்டே.'' (கள—3)

என்றனர். மேலோர், கீழோர் என்பன முன்னவர், பின்னவர் என்ற அளவில் நின்றன. முன்னவர் மூவர்க்கும் ஏற்பட்ட மணவினை, அதாவதுமுன்னவர் மூவரும் ஒன்றாகச் செய்து வரும் மணவினை பின்னவராகிய உழுதுண்ணும் வேளாளர்க்கு ஆகியிருந்த காலமும் ஒன்று உண்டு; அதாவது முன்னர் நால்வருக்கும் ஒன்றாகவே மணவினை நடந்து வந்தது. ஒன்றாகக் கொண்டு கொடுத்து வாழ்ந்து வந்தனர்என்பதாம்.

பண்டு உழவுக்கு உதவியாகவே தச்சு, கொல் முதலிய எல்லாத் தொழில்களும் நடந்து வந்தன. அத் தொழிலாளர்களெல்லாம் வேளாள இனமாகவே இருந்து வந்தனர். அரசன் முதல் அறுவடையாளன் ஈறாகிய எல்லாத் தமிழ் மக்களும் கொண்டு கொடுத்து, உண்டுறங்கி ஒன்றாகவே வாழ்ந்து வந்தனர்.

(தொடரும்)

அச்சிட்டு வெளியிடும் ஆசிரியர்
என். கரிவரதசாமி. தமிழன் அச்சகம்
59. கச்சேரி வீதி, ஈரோடு.